ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1640/7 - 2010 පෙබරවාරි 08 වැනි සඳුදා - 2010.02.08
*1640/7 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகாண சபைகளின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கண்காணிக்கும் அதிகாரம் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடனும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (நேர்- எதிர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தென் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவுடனும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (நேர் - எதிர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (2) ஆம் பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் விநியோக, வடிகாலமைப்பு, மின்சாரம், பொறியியல் சேவைகள், சுகாதார சுதேச வைத்தியம், மற்றும் உள்ளூராட்சி ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய சான் விஜயலால் த சில்வா ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப 1639/4 ஆம் இலக்கமும் 2010.2.01 ஆந் திகதியும் கொண்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவராகிய திரு. ஹேவா லொக்குகே ஜயசிரி அவர்கள் குறிப்பிட்ட பிரதேச சபையின் தலைவர் பதவியில் கடமையாற்றுவதை உடனடியாக இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த சபையின் தலைவர் பதவியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கருமங்களை செய்வதற்கும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களினது நிர்வாகத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (நேர் - எதிர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (3) (அ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் உப தலைவராகிய திரு. சிறிசேன ரத்நாயக வீரகோன் அவர்களுக்கு இத்தால் உத்தரவிடப்படுகின்றது.*

*2. இவ்வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் திரு. சிறிசேன ரத்நாயக வீரகோன் அவர்கள் 2010.02.03 ஆந் திகதியுடைய கடிதத்தின் மூலம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவர் பதவியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் அல்லது கருமங்களைச் செய்தல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளாததன் காரணமாக 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களது நிர்வாகத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 3 (2) ஆவது பிரிவின் கீழும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (நேர் - எதிர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம்*

ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (3) (அ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவர் பதவியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கருமங்களைச் செய்வதற்கும் ஹம்பந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகிய திரு. போகஹபிட்டிய சேரசிங்க கமகே ருவன்சிரி அவர்களுக்கு இத்தால் உத்தரவிடப்படுகின்றது.

சான் விஜயலால் த சில்வா,
நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி ,
போக்குவரத்து, வடிகாலமைப்பு, மின்சாரம், பொறியியல்,
சேவைகள், சுகாதார சுதேச வைத்தியம், நீர் விநியோகம் ஆகிய
விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்,
தென் மாகாண மாகாண சபை.

2010, பெப்புருவரி 05.

2- 531

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.